# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் நாடு தொலைதொடர்பு ஒப்பந்த ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**தேதி:-06.08.2014**

### ஆகஸ்ட்-8,2014 அன்று மாவட்ட தலை நகர்களில்

# “பாடை கட்டி கண்டன ஆர்ப்பாட்டம்”

அன்புள்ள தோழர்களே,

வேலூர் மாவட்டத்தில் பணியாற்றி வந்த 140 ஒப்பந்த ஊழியர்களை ஆகஸ்ட் 1, 2014 முதல் மாவட்ட நிர்வாகம் வேலையை விட்டு நிறுத்தி உள்ளது. இந்த தோழர்களை மீண்டும் பணிக்கு எடுக்கக் கோரி ஆகஸ்ட்1, 2014 முதல் வேலூர் BSNL பொது மேலாளர் அலுவலகத்தில் BSNL ஊழியர் சங்கம் மற்றும் தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கங்களின் மாவட்ட சங்கங்களுடன் பாதிக்கப்பட்ட 140 தோழர்களும் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் வேலூர் மாவட்ட நிர்வாகம் எந்தவிதமான சலனமும் இன்றி முடங்கி கிடக்கிறது. நமது மாநில சங்கங்களும் இந்த பிரச்சனையை எழுத்து பூர்வமாக BSNL தலைமை பொது மேலாளரிடம் எடுத்துச் சென்றன.

ஒப்பந்த ஊழியர் REGULATION & ABOLITION ACT 1970, பிரிவு 21(4)ன் படி ஒரு ஒப்பந்ததாரர் ஒப்பந்த ஊழியருக்கு முழு சம்பளம் கொடுக்காமலோ, அல்லது அரை சம்பளம் உள்ளிட்ட குறைந்த சம்பளம் கொடுத்தார் என்றால் முதன்மை பணியமர்த்துபவர் (PRINCIPAL EMPLOYER) என்ற அடிப்படையில் BSNL நிர்வாகம் அவ்வாறு குறைக்கப்பட்ட ஊதியத்தை வழங்க வேண்டும். அப்படி வழங்கப்பட்ட பணத்தை அந்த ஒப்பந்ததாரரின் காப்பீட்டு தொகையிலிருந்து BSNL நிர்வாகம் கழித்துக் கொள்ளலாம்.

இந்த விதியின் படி வேலூர் மாவட்ட நிர்வாகம் செயல்பட்டு இருக்க வேண்டும். ஆனால், ஒப்பந்த ஊழியருக்கு DA வழங்க வேண்டும் என நமது மாவட்ட சங்கங்கள் கோரியதை வஞ்சகமாக மனதில் ஏற்றிக் கொண்டு 140 தோழர்களை வேலையிலிருந்து வேலூர் பொது மேலாளர் பணி நீக்கம் செய்துள்ளார்.

அந்த ஒப்பந்ததாரரின்(SIS GROUP ENTERPRISES) ஒப்பந்தத்தை வேலூர் மாவட்ட நிர்வாகம் ரத்து செய்துவிட்டது. அப்படி ரத்து செய்யும் போது விதிகளுக்கு உட்பட்டு இந்த 140 தோழர்களை பணி புரிய அனுமதித்து இருக்க வேண்டும். உதாரணமாக L1-ன் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டால் L2 டெண்டரை அங்கீகரித்து அதன் மூலம் பணிகள் தொடர்ந்து மேற்கொண்டு இந்த 140 தோழர்களுக்கு பணி கொடுத்திருக்க வேண்டும். இந்த விதியை வேலூர் மாவட்ட நிர்வாகத்திடம் சுட்டிக் காட்டினோம்.

ஆனால் வேலூர் மாவட்ட நிர்வாகமோ L2, L3 என யாரும் இல்லை எனக் கூறுகிறது. அதாவது ஒரே ஒருவரிடம் மட்டும் டெண்டர் பெறப்பட்டு அதையே இறுதிப்படுத்தி உள்ளது, வேலூர் மாவட்ட நிர்வாகம். இது BSNL-ன் சட்ட விதிகளுக்கு புறம்பானது. 'SINGLE TENDOR' எனில் ஊழலுக்கு வழிவகுக்கும் என்று காலம் காலமாக அனைவரும் அறிந்ததே. வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாட்டில் ஊழல் இருக்கிறது என்று சந்தேகம் எழலாம் இல்லையா? இதே வேலூர் மாவட்ட நிர்வாகம் டெண்டரில் செய்யப்பட வேண்டிய பல பணிகளை இன்றும் 'BILL WORK'-ல் செய்கிறது.

மாநில தலைமை பொது மேலாளரிடம் இந்த பிரச்சனையை விவாதித்தும் எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே 05.08.2014 அன்று ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என இரு மாநில சங்கங்களின் அறைகூவலின் படி தமிழகம் முழுவதும் அனைத்து கிளைகளிலும் சக்தி மிக்கதாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

நிர்வாகத்தின் பிடிவாத போக்கு தொடர்வதை இனியும் நாம் அனுமதிக்க முடியாது. நமது போராட்டத்தின் வீச்சினை தமிழகம் முழுவதும் அதிகரித்திட வேண்டும். அதன் அடிப்படையில் அடுத்த கட்ட இயக்கமாக கீழ்கண்ட போராட்டத்தை அனைத்து ஊழியர்களையும் திரட்டி வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என இரு மாநில சங்கங்களும் அறை கூவி அழைக்கிறது.

## போராட்டம்

08.08.2014 அன்று அனைத்து மாவட்ட தலைநகர்களிலும், மாவட்ட, மாநில நிர்வாகங்களின் ஊழியர் விரோத போக்கினை கண்டித்து மாவட்ட பொது மேலாளர் அலுவலகங்கள் முன்பு மதிய உணவு இடைவேளையின் போது

## "பாடை கட்டி கண்டன ஆர்ப்பாட்டம்"

என்கிற போராட்டத்தை வலுவாக நடத்துவோம்.

**கேளாதவர் காது கேட்கட்டும்.**
**கொத்தளங்கள் நடுங்கட்டும்.**
**கோட்டைகள் நொறுங்கட்டும்.**

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள,

**C.வினோத்குமார்**
**மாநில செயலாளர்**
**TNTCWU**

**S.செல்லப்பா**
**மாநில செயலாளர்**
**BSNLEU.**